சுருக்கம்

வேளாண்மை – பயறு வகைகள்– ஒருங்கிணைந்த பயறு வகை விதை உற்பத்தி மையம் மற்றும் விதை பெருக்குத் திட்டம் – 2013–2014 – ஆம் ஆண்டில் (01.04.2013 முதல் 31.03.2014 வரை) தொடர்ந்து செயல்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வே.உ.4) துறை

ஆனி 6, திருவள்ளுவர் ஆண்டு 2044

அரசாணை (நிலை) எண். 128 நாள்: 20.06.2013

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.127, வேளாண்மை (வே.உ.4) துறை, நாள் 05.07.2012.
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.பஎவி 2 /37568/13, நாள் 01.04.2013.

*****

ஆணை:-

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒருங்கிணைந்த பயறு வகை விதை உற்பத்தி மையம் மற்றும் விதை பெருக்குத் திட்டத்தினை 2012–2013–ஆம் ஆண்டில் ரூ.3304.060 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்திட ஆணை வழங்கப்பட்டது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்காணும் திட்டத்தினை ரூ.3304.060 இலட்சம் செலவில் 2013–2014–ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்திட வேளாண்மை இயக்குநர் அனுமதியும் மற்றும் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தியமைக்கு பின்னேற்பும் வழங்க கோரி செயற்குறிப்புகளை அரசிற்கு அனுப்பியுள்ளார்.

3. மேற்கூறியுள்ள சூழ்நிலையில், வேளாண்மை இயக்குநரின் செயற்குறிப்புகள் அரசினால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அவ்வண்ணமே வேளாண்மை இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று ஒருங்கிணைந்த பயறு வகை விதை உற்பத்தி மையம் மற்றும் விதைப் பெருக்குத் திட்டத்தினை 2013–2014 (01.04.2013 முதல் 31.03.2014 வரை) ஆம் ஆண்டில் ரூ.2947.21 இலட்சம் (ரூபாய் இருபத்தொன்பது கோடியே நாற்பத்தேழு இலட்சத்து இருபத்தொராயிரம் மட்டும்) ஒதுக்கீட்டில், அதாவது பொதுப்பிரிவில் ரூ.2125.01 இலட்சம் மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கான சிறப்பு பிரிவில் ரூ.822.20 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்திட அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

4. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் செலவிடப்பட வேண்டும்:-

"2401–00–பயிர் வளர்ப்பு–103–விதைகள்–1 திட்டத்தில் சேராதது–
AC பயறு விதைப் பெருக்கமும், விநியோகமும்"

(ததொகு 2401–00–103 AC 0009) – ரூ. 2125.01 இலட்சம்

"2401–00–பயிர் வளர்ப்பு–789–ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம்–பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – JB – பயறு விதைகளைப் பெருக்கி விநியோகித்தல்"

(ததொகு 2401–00–789–JB–0000)–ரூ. 822.20 இலட்சம்

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று வழங்குவதற்கு வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகின்றது.

6. இத்திட்டத்திற்கென செலவிடப்படும் கொள்முதல் மற்றும் பணியாளர் செலவு ஆகியவைகளை முழுமையாக திரும்பப் பெற வேண்டுமென வேளாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இத்திட்டம் ஒரு தொடர் திட்டமாதலால் 31.03.2013–க்கு பின்னர் அரசின் ஆணையை எதிர்நோக்கி இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வரும் வேளாண்மை இயக்குநரின் செயலுக்கு பின்னேற்பும் வழங்கப்படுகிறது.

7. இத்திட்டத்தின் வரவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"0401–00–பயிர் வளர்ப்பு–103–விதைகள்–AD–பயறு வகை விதைப் பெருக்கத் திட்டம்"

(ததொகு 0401–00–103–AD–0009)

8. இந்த ஆணை நிதித் துறையின் அ.சா.கு.எண். 27812/நிதி(வேளாண்மை)/13, நாள் 4.6.2013–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா,
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

வேளாண்மை இயக்குநர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை.18/ (பெயரில்)
மாநிலக் கணக்காயர்(G&SSA), சென்னை.18/ (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–8 (கிழக்கு)

<u>நகல்</u>

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
நிதித்(வேளாண்மை)துறை, சென்னை–9.
இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை–9.
இருப்புகோப்பு / உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

21/6/13
பிரிவு அலுவலர்
21/6/13